*1*

# தேவனைப்பற்றிய நமது நம்பிக்கைகளுக்கு ஒரு வசனப்பகுதியை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது

## (பகுதி 1)

*தொடங்குவதற்கு: நாம், "இவ்வசனப்பகுதி ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி அக்கறை கொண்டுள்ளதா?"; "இவ்வசனப்பகுதி தேவனைப் பற்றியும் மனிதர் மற்றும் அண்டம் ஆகியவற்றுடன் அவரது நடவடிக்கைகள் பற்றியுமான நமது நம்பிக்கைகளுடன் தொடர்புபடுகிறதா?" என்று கேட்க வேண்டும். அவ்வாறு இருந்தால், விளக்கம் அளிக்கப்பட்டுள்ள வசனப்பகுதி, அடுத்ததாக நமது நம்பிக்கைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படக் கூடும்.*

நமது அன்றாட வாழ்வில் நாம் செய்யும்படி தேவன் விரும்புகிறது என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம் முயற்சி செய்கையில், நாம் நம்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை நாம் முதலில் அறிய வேண்டும். நம்பிக்கைக்கு முன்னதாக செயல்பாடு உள்ளது. நாம், தேவனுடைய சித்தத்தைச் செய்கையில், அவரைப் பற்றிய உபதேசங்கள் (இறையியல்) குறித்த சரியான புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்க வேண்டும்.

வேதாகம உபதேசங்களைப் புரிந்துகொள்வதற்கான நாடுதலை நாம் "இறையியல்ரீதியான விளக்கம் அளித்தல்" என்று அழைக்கிறோம். இதன் செயல்முறையை நாம் விளக்கப்படுத்துகையில், "இறையியல்ரீதியான விளக்கம் அளித்தல்" என்பது, தேவன், கிறிஸ்து மற்றும் சபை போன்ற வேதாகமத் தலைப்புகள் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதைக் கண்டறிதலுக்கானதாக உள்ளது.

சில வேளைகளில் நமது படிப்பு, ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியைப் புரிந்துகொள்வதுடன் அல்ல, ஆனால் - "பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது?" என்பது போன்ற - ஒரு கேள்வியுடன் தொடங்குகிறது. மற்ற வேளைகளில் நாம், ஒரு வசனப்பகுதியை வாசித்து நாம் விபரமாக ஆய்வு செய்ய விரும்பும் ஒரு பாடக்கருத்தைக் காணலாம். நமது கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேதாகமத்தை நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும்? இன்றைய நாட்களின் மக்களுக்கு நாம் வேதாகமத்தைக் கற்க நாடுகையில் நம்மை வழிநடத்த வேண்டிய கொள்கைகள் யாவை?

*வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் உண்மையாக இருந்தது எதுவோ அது இன்றைய நாட்களில் இன்னமும் உண்மையாக இருக்கிறது என்பதே இந்தப் பாடத்திற்கான அடிப்படை யூகமாக உள்ளது, எனவே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் விசுவாசித்ததும் போதித்ததும் எதுவோ அதையே நாமும் விசுவாசித்து போதிக்க வேண்டும்.* ஆதிக்கிறிஸ்தவர்கள் விசுவாசித்து போதித்தது என்ன என்பது பற்றிய முடிவுகளை நாம் எவ்வாறு அடைகிறோம்? இந்தப் பாடத்திலும் இதைத் தொடர்ந்து வரும் அடுத்த பாடத்திலும் நாம், வேதாகமத்தின் வேறுபட்ட தலைப்புகள் பற்றிக் கற்றுக்கொள்வதற்குப் பின்பற்றக்கூடிய நான்கு ஆலோசனைகளைப் பற்றி ஆழமாகச் சிந்திப்போம்.

## தெளிவான அர்த்தம் மற்றும் நடைமுறை ஆகியவற்றைக் கண்ணோக்குங்கள்

*ஒரு பாடக்கருத்தின் மீதான வசனப்பகுதி ஒவ்வொன்றின் எளிய அர்த்தத்தை நாடுதல்* என்பது நாம் பின்பற்ற வேண்டிய முதலாவது ஆலோசனையாக உள்ளது. வேதாகமம் தெளிவாகப் போதிப்பது என்ன என்பதை நாம் எப்போதுமே வலியுறுத்த வேண்டும்.

தெளிவான அர்த்தத்தைக் கண்ணோக்க நாடுதல் என்பது மறைவான அர்த்தங்களைக் கண்ணோக்குதலை அல்லது உவமையணியான அல்லது தனிப்பட்ட வகையான அர்த்தங்களை நாடுதலை நீக்கிப்போடுகிறது. சாத்தியமான மாதிரிகள் மற்றும் உவமையணிகள் ஆகியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில் அல்லது ஒரு வசனப்பகுதியில் அதை எழுதியவர் குறிப்பால் உணர்த்தியது என்ன என்பதைப் பற்றி யூகித்தலில் சில மதிப்பு இருக்கையில், வசனம் கூறுவது என்ன மற்றும் அது மேலோட்டமாக அர்த்தப்படுத்துவது என்ன என்பதை மாத்திரம் புரிந்து கொண்டு அதை வலியுறுத்துதல் என்பது நடைமுறைப் பயன்பாட்டில் முதலாவதும் மிக முக்கியமானதுமான விதியாக உள்ளது! வேதவசனங்களின் எளிய போதனைகளை நாம் புரிந்துகொண்டு அவற்றை விசுவாசித்தால், இரட்சிக்கப்படுவதற்குப் போதுமானவற்றை நாம் அறிந்துள்ளோம் என்று நிச்சயப்படுத்த முடியும்.

### தலைப்பு 1: இயேசுவின் தெய்வீகத்துவமும் மனிதத்துவமும்

இயேசு, தேவனுடைய குமாரனாக இருந்தார் மற்றும் இருக்கிறார் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது (மத்தேயு 16:16; மாற்கு 1:1; யோவான் 10:33-36). அவர் ஒரு மனிதராகவும் இருந்தார் என்றும் அது போதிக்கிறது (லூக்கா 19:10; 1 தீமோத்தேயு 2:5). இவ்விரு உண்மைகளும் எப்படி மெய்யாக இருக்க முடியும்? ஒரே நபர் எவ்வாறு தெய்வீகத்துவமானவராகவும் மனிதராகவும் இருக்க முடியும்? தேவனாக இருந்தவரான "வார்த்தையான" இயேசு (யோவான் 1:1) மாம்சமானார் (யோவான் 1:14) என்ற கருத்து, புரிந்துகொள்வதற்குக் கடினமானதாக உள்ளது என்பது தெளிவு, ஏனெனில் இப்பாடக்கருத்து, ஆதி சபையில் பல நூற்றாண்டுகளாக விவாதத்தின் மையமாக இருந்தது. கல்வியாளர்கள் தொடர்ந்து இந்தக் கருத்துடன் போராடிக் கொண்டுள்ளனர். முறைப்படியான இறையியலின் படிப்புகள், இயேசு எப்படி தேவனாகவும் மனிதராகவும் இருக்க முடிந்தது என்பதை விளக்க முயற்சிப்பதில் வகுப்பு

நேரங்களில் பல மணிகளைச் செலவிடுகின்றன; மற்றும் விசுவாசத்தில் இருந்து விலகும் போதகர்கள் இன்னும் எழும்பி, கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தையோ அல்லது அவரது மனிதத்துவத்தையோ மறுக்கும் உபதேசங்களைப் போதிக்கின்றனர்.

இப்படிப்பட்ட கடினமான உபதேசத்தை விசுவாசிக்க அல்லது போதிக்க, சராசரி வேதாகம மாணவர் அல்லது போதகர் என்ன செய்ய வேண்டும்? *நாம் தெளிவான அர்த்தத்தைக் கண்ணோக்கி அதன் அர்த்தத்தை வலியுறுத்த நாடுவோமாக.* "இயேசுவைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?" என்று நாம் கேட்டால், "அவர் தேவனாகவும் மனிதராகவும் இருந்தார்!" என்று நாம் பதில் அளிக்க வேண்டும். ஒரு நபர் எப்படி தெய்வீகமானவராகவும் மனிதராகவும் இருக்க முடிந்தது என்று நாம் புரிந்துகொண்டிருக்க வேண்டுமா? நாம், "திரு அவதாரத்தின் இரகசியம்" என்பதை ஒவ்வொருவரின் திருப்திக்காகவும் விளக்கம் தரக்கூடியவர்களாக இருக்க வேண்டுமா? இல்லை! இயேசு கிறிஸ்துவைப் பற்றி வேதாகமம் தெளிவாகப் போதிப்பதை விசுவாசித்து அதை அறிவித்தல் என்பதே நாம் செய்யக் கூடிய எல்லாமுமாக உள்ளது! இறையியல்ரீதியான யூகம் என்பது நமது குறிக்கோளாக இருப்பதில்லை. உபதேசத்தின் எளிய அர்த்தத்தை நமது சிந்தைகளில் பெற்று அதைப் பற்றிக்கொண்டிருப்போமாக.

**தலைப்பு 2: திருமணம், திருமண முறிவு மற்றும் மறுதிருமணம்**

இன்னொரு உதாரணத்தைப் பயன்படுத்துவதற்கு நாம், திருமணம், திருமண முறிவு மற்றும் மறுதிருமணம் ஆகியவற்றைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதைக் கேட்போமாக. இந்தக் பாடக்கருத்தைப் பற்றிய தகவல்களை வேதாகமத்தின் பல வசனப்பகுதிகள் அளிக்கின்றன, அவை யாவையும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும். இருப்பினும், அவை ஒவ்வொன்றும் கவனமாக விளக்கம் தரப்பட்டு அவை ஒவ்வொன்றின் போதனைகளும் ஒன்றிணைக்கப்பட்ட பின்பும்கூட, இந்தக் தலைப்பின் மீதான நமது கேள்விகள், பதில் அளிக்கப்படாதவைகளாக இருக்கலாம். திருமணம் மற்றும் திருமண முறிவு பற்றிய போதனைகளை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் உள்ளடங்கியுள்ளன என்பது, அந்த வசனப்பகுதிகளின் மறைமுகமான கருத்துக்கள் சிலவற்றைப் பற்றி மாறுபட்ட முடிவுகள் கிறிஸ்தவர்களால் - கல்வியாளர்களாலும்கூட - அடிக்கடி அடையப்படுகின்றன என்ற உண்மையில் இருந்து தெளிவாகிறது.

விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில் நாம், இப்படிப்பட்ட விஷயங்களில் என்ன செய்ய வேண்டும்? "தெளிவான அர்த்தத்தைக் கண்னோக்குதல்" என்ற விதியை நாம் கடைப்பிடிக்க முடியும், அதன் பின்பு நாம் நமது போதனை மற்றும் நடைமுறையில் அந்தத் தெளிவான அர்த்தத்தை வலியுறுத்த முடியும்.

அந்த சத்தியத்தை விவரிப்பதற்கு, திருமணம், திருமண முறிவு மற்றும் மறுதிருமணம் என்ற பாடக்கருத்தின் மீதான திறவுகோல் வசனப்பகுதிகளில் ஒன்றான, மத்தேயு 19:3-9 பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு

*அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

9ம் வசனமானது, முரண்பாட்டை உருவாக்கும் இவ்வசனப்பகுதியின் ஒரு பாகமாக உள்ளது, இது ‘‘ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்’’ என்று கூறுகிறது. இருப்பினும், இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தம் இதற்கு முன்பாகவே காணப்படுகிறது. அடிப்படையில் இயேசு, *ஒரு ஆணும் அவரது மனைவியும் திருமணமுறிவு செய்துகொள்ளலாம் என்று தேவன் ஒருக்காலும் நோக்கங்கொண்டிருக்கவில்லை என்று போதித்தார்; திருமணம் என்பது வாழ்நாள் காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டியதாக உள்ளது!* திருமணமுறிவு மற்றும் மறுதிருமணம் பற்றி நாம் எந்த முடிவுகளை அடைந்தாலும், திருமணம் மற்றும் திருமணமுறிவு என்ற பாடக்கருத்தை நாம் கலந்துரையாடும்போது, மேற்கூறப்பட்ட அந்த சத்தியமே நாம் வலியுறுத்த வேண்டிய சத்தியமாக உள்ளது!

உண்மையில், இவ்வசனப்பகுதியின் (மற்றும் இதில் போதிக்கப்பட்ட சத்தியத்தை உறுதிப்படுத்தும் மற்ற வசனப்பகுதிகளின்) தெளிவான அர்த்தத்தை நாம் விசுவாசித்து, போதித்து மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தினால், *நாம் ஒருக்காலும் திருமண முறிவைச் செய்யமாட்டோம்* என்பதால், திருமணமுறிவிற்குப் பின்பு மறுதிருமணம் செய்தல் பற்றி நமக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்ன என்பதைப் பற்றித் தனிப்பட்ட வகையில் நாம் கவலைப்படத் தேவை இருக்காது!

### தலைப்பு 3: கிறிஸ்தவரும் அரசாங்க அதிகாரத்துவங்களும்

இன்னொரு உதாரணம் என்ற வகையில், கிறிஸ்தவர் மற்றும் அரசாங்க அதிகாரத்துவம் பற்றி புதிய ஏற்பாடு போதிப்பது என்ன என்பதைப்

பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். ரோமர் 13:1ம் வசனம், "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறது. இவ்வசனப்பகுதி தெளிவானதாகவும் மற்ற வசனப்பகுதிகளுடன் (எடுத்துக்காட்டாக, 1 பேதுரு 2:13-15ஐக் காணவும்) இணக்கம் உள்ளதாகவும் இருக்கிறது. இதன் போதனை தெளிவானதாக உள்ளது. கிறிஸ்தவர்கள், அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அவர்கள் எந்த அரசின்கீழ் வாழ்கிறார்களோ அந்த அரசிற்கு அடங்கி வாழவேண்டும்.

அரசாங்கத்துடன் கிறிஸ்தவர்களுக்கு உள்ள உறவுமுறை பற்றி எல்லா வகையான கேள்விகளும் கேட்கப்பட முடியும். வேதாகமரீதியான இந்த அடிப்படை விதிக்கு குறைந்தபட்சம் ஒரு விதிவிலக்கு உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது: "மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (நடபடிகள் 5:29). இருப்பினும், மற்ற கேள்விகள் - அநீதியான சட்டங்கள் மற்றும் அநீதியான யுத்தங்கள் பற்றிய கேள்விகள் - இன்னமும் எஞ்சியிருக்கலாம். அவ்வாறு இருந்தால், தெளிவான சத்தியத்தை வலியுறுத்துவதை நாம் நினைவில் வைக்க வேண்டும்: சட்டப்படி கிறிஸ்தவர்கள், குடிமை அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அந்த சட்டத்தை மறந்துபோகும் அளவுக்கு, சாத்தியமான விதிவிலக்குகள் பற்றி நாம் அதிகமாக அக்கறை கொண்டவர்கள் ஆக முடியாது.

### தொகுப்புரை

இந்த மூன்று உதாரணங்களும், கருத்தைத் தெளிவாக்க வேண்டும். நாம் வேதாகமத்தைப் படித்து அதைப் போதிக்க முயற்சி செய்கையில், வேதாகமம் தெளிவாகப் போதிப்பது என்ன என்பதன் மீது நாம் கவனம் குவிக்க முடியும் அல்லது வேதவசனங்களில் தெளிவற்றதாக உள்ளது என்ன என்பதை நாம் வலியுறுத்த முடியும். தெளிவாகப் போதிக்கப்படாத உபதேசங்களை வலியுறுத்தும் ஒருவர் "தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவருமாயிருக்க"லாம் (1 தீமோத்தேயு 6:4; மேலும் காண்க 2 தீமோத்தேயு 2:16, 23). ஆகையால், நாம் விசுவாசித்து போதிக்கத் தேவையானது என்ன என்பதை புரிந்துகொள்ள நாடுவதில், *தெளிவான அர்த்தத்தைக் கண்ணோக்கி அதை வலியுறுத்துதல்* என்பதே முதல் விதியாக உள்ளது!

## வேதவசனங்களின் இறையியல் மறைகருத்துக்கள் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்

ஒரு பாடக்கருத்தின் மீதான வசனப்பகுதிகளில் மறைவான கருத்துக்கள் ஏதேனும் உள்ளனவா என்று கவனித்தல் என்பது, "இறையியல்ரீதியாக விளக்கம் அளித்தல்" பற்றிய இரண்டாவது ஆலோசனையாக உள்ளது. சிலவேளைகளில் வேதாகமம் நேரடியாகவும் தெளிவாகவும் போதிக்கிறது, எடுத்துக்காட்டாக அது, "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று கூறும் இடத்தைக் கண்ணோக்குங்கள் (1 யோவான் 4:8). இருப்பினும் வேதாகமத்தின் இறையியல்ரீதியான

உபதேசங்களில் பல, மறைமுகமாகவே போதிக்கப்படுகின்றன; அவைகள் தெளிவாக உரைக்கப்படுவதற்கு மாறாக, மறைமுகமாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. ஆகையால் விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில், நாம் படித்துக் கொண்டிருக்கும் எந்த வேதவசனப்பகுதியிலும் உள்ள இறையியல்ரீதியான மறைமுகமான கருத்துக்களைப் பற்றி நாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

**மறைமுகமான கருத்துக்களைப் பற்றி**
**ஆழ்ந்து சிந்திப்பதற்கான அவசியம்**

பாரம்பரியமான விளக்கவுரை முறைமைகளை விமர்சனம் செய்பவர்கள், வேதாகமம் என்பது முன்மொழிதல்களின் அமைவாக இருப்பதில்லை,[1] ஆனால் அது, தேவனிடத்தில் இருந்த மனிதனுக்கு வந்த, ஒரு அன்பின் கடிதமாக (அல்லது அன்பின் கடிதங்களின் தொகுப்பாக) உள்ளது ஒன்று சிலவேளைகளில் விவாதிக்கின்றனர். இந்தக் கருத்தில் இருந்து அவர்கள், வேதாகமத்தின் போதனைகளை முன்மொழிதல்களின் ஒரு அமைவு என்று குறைக்க நாம் முயற்சி செய்தால், வேதாகமத்திற்கு நாம் பாதகம் செய்கிறோம் என்று அவர்கள் விவாதிக்கின்றனர்.[2]

அவர்கள் கூறுவதில் ஓரளவு உண்மை உள்ளது. வேதாகமம் முன்மொழிதல்களை மாத்திரமே முதன்மையாகக் கொண்டிருப்பதில்லை என்பது உறுதி; தேவனுடைய அன்பை நமக்குக் கூறுவதற்காக அந்த அன்பினால் தரப்பட்ட புத்தகமாக இது இருக்கிறது என்பதும் சந்தேகமின்றி உண்மையே. வேதாகமத்தை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய முன்மொழிதல்களின் அமைவு என்ற அளவுக்குக் குறைத்து மதிப்பிடக்கூடாது என்பதும் உண்மையாகவே உள்ளது.

இருப்பினும், வேதாகமப் போதனைகளில் இருந்து தரவழைக்கப்படும் முன்மொழிதல்கள் ஏதோ ஒரு வகையில் மோசமானதாக உள்ளது என்ற கருத்து ஒரு தவறான முடிவாக உள்ளது. எந்த ஒரு விஷயத்தையும் நாம் வாசிக்கும் (அல்லது கேள்விப்படும்) எந்த வேளையிலும், நாம் வாசித்துள்ளவற்றில் (அல்லது கேள்விப்பட்டுள்ளவற்றில் இருந்து) நாம் - முன்மொழிதல்களைக் கொண்டுள்ள - முடிவுகளை அடைதல் சாத்தியமாக உள்ளது.[3] “புதிய வரியை எதிர்த்து நாட்டின் தலைநகரில் ஆயிரக்கணக்கானவர்கள் கலகம் செய்தனர்” என்ற ஒரு தலைப்புச் செய்தியை செய்தித்தாளில் நாம் வாசித்தால், புதிய வரியைப் பற்றி நாட்டில் பலர் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று அந்தத் தலைப்புச் செய்தி மறைமுகமாக உணர்த்துவதாகக் கூறுவதை நாம் நியாயப்படுத்துகிறோம். நாம் மற்றவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளும்போது, நாம் கூறுவதின் மறைவாக கருத்துக்களை அவர்கள் புரிந்துகொள்ளுதலையே அடிக்கடி சார்ந்திருக்கிறோம்.

அவ்வாறே வேதாகமம் அடிக்கடி, நேரடியான கூற்றுக்களுக்கு மாறாக மறைமுகமான உணர்த்துதலில் வேதாகமப் பாடக்கருத்துக்களைப் பற்றிய சத்தியத்தைப் போதிக்கிறது. உதாரணமாக, தேவனுடைய பண்புகளில் ஒன்றாக எங்கும் நிறைந்திருக்கும் தன்மைபற்றி நாம் கூறுகிறோம். இருப்பினும் வேதாகமத்தில் எந்த இடத்திலும் அந்த சத்தியம் மிகச்சரியான சொற்றொடரில் உரைக்கப்படுவதில்லை. தேவனிடத்தில் சங்கீதக்காரர், “உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில்

படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்" என்று கூறுவதைத்தான் நாம் வேதாகமத்தில் காண்கிறோம் (சங்கீதம் 139:7, 8). இவ்வசனங்களில் (மற்றும் இவைபோன்ற பிற வசனங்களில்) இருந்து நாம், எழுத்தாளர் மறைமுகமாக உணர்த்துவதைக் கொண்டு, தேவன் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று முடிவு செய்கிறோம்.

வேதாகம எழுத்துக்களில் இறையியல்ரீதியான மறைகருத்துக்கள் ஏராளமாக உள்ளன. 1 கொரிந்தியர் நிருபத்தைப் பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்கினார்:

> தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (1 கொரிந்தியர் 1:1-3).

இவ்வசனப்பகுதி, இதைத் தொடர்ந்து வரும் மற்ற எல்லா வசனப்பகுதிகளுக்கும் வரலாற்றுப் பூர்வமான பின்னணியை அளிக்கிறது. பவுல் கொரிந்துவில் இருந்த சபைக்கு தாம் ஒரு நிருபத்தை எழுதுவதாக எளிமையாக உரைத்தார், ஆனால் அவரது திறவு வாக்கியங்களான இவற்றில் மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ள சில சத்தியங்களை நாம் கவனிப்போமாக:

1. பவுல் ஒரு அப்போஸ்தலனாக இருந்தார்.
2. "தேவனுடைய சபை" என்பது சபைக்கு வேதவசனரீதியான ஒரு குறிப்புப் பெயராக உள்ளது.
3. சபையில் இருப்பவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக உள்ளனர்.
4. கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர், எனவே அவர்கள் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்பட முடியும்.
5. கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டவர்களாக (அல்லது "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக"; காண்க - 2 பேதுரு 1:10) உள்ளனர்.
6. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கின்றனர்.
7. இயேசு, ஆண்டவரும் கர்த்தருமாக இருக்கிறார்.
8. தேவன், கிறிஸ்தவர்களுக்குப் பிதாவாக இருக்கிறார்.

விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில், இந்த இறையியல்ரீதியான மறைமுகக் கருத்துக்களைக் கவனித்தல் என்பது மாத்திரம் நமது முதலாவதான அல்லது ஒரே பொறுப்பாக இருப்பதில்லை. விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில் நமது முதல் பொறுப்பு, உண்மையில் மூன்று மடங்கானதாக உள்ளது: வசனப்பகுதியை

அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ளுதல், அது காணப்படும் புத்தகத்துடன் அது எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைக் காணுதல் மற்றும் அதன் முதல் வாசகர்கள் அதிலிருந்து பெற்றுக்கொண்டது என்ன என்பதைத் தீர்மானித்தல். இருப்பினும் நாம், இப்படிப்பட்ட வேதவசனப்பகுதி ஒன்றிற்கு விளக்கம் அளிக்கும்போது, இங்கு பட்டியல் இடப்பட்டது போன்ற இப்படிப்பட்ட இறையியில் உண்மைகளைக் கவனிக்காமல் இருக்க முடியாது. *அவற்றை நாம் கவனிக்க வேண்டும்!* தேவனைப் பற்றிய மற்றும் மனிதருடன் அவரது செயல்பாடுகள் பற்றிய சத்தியங்களைப் புரிந்துகொள்வதற்காகவே நாம் வேதாகமத்தை வாசிக்கிறோம்; ஆகையால், நாம் வாசிப்பவற்றின் இறையியல்ரீதியான மறைகருத்துக்களை நாம் தொடர்ந்தும் மனப்பூர்வமாகவும் நாடவேண்டும்.

நாம் வேதாகமத்தின் மறைகருத்துக்களுக்கு நமது கண்களும் காதுகளும் திறக்கப்பட்ட நிலையில் அதைப் படிக்கும்போது, இறையியல் சத்தியங்களை - முன்மொழிதல்கள் என்ற வகையில் உரைக்கப்படக் கூடிய சத்தியங்களையும், வேறுவகையில் நாம் தவறவிடக்கூடிய சத்தியங்களையும் - நாம் கற்றறிகிறோம்.

**உதாரணம்: யோவான் 8ல் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுடன் இயேசுவின் எதிர்கொள்ளுதல்**

யோவான் 8:1-11ல் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுடன் இயேசுவின் எதிர்கொள்ளுதலில் ஒரு உதாரணம் காணப்பட முடியும். விபசாரத்தில் பிடிபட்ட பெண் இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டு வரப்பட்டாள். இயேசுவை விமர்சித்துக் கொண்டிருந்தவர்கள், நியாயப்பிரமாணத்தின்படி அவள் கல்லால் எறியப்பட வேண்டுமா என்று அவரிடம் கேட்டனர். இயேசு, “உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்” என்று பதில் அளித்தார் (யோவான் 8:7). இயேசுவை விமர்சனம் செய்தவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர், அந்தப் பெண்ணிடம் இயேசு, “நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே” என்று கூறினார் (யோவான் 8:11ஆ). மற்ற விஷயங்களுடன் இந்த வரலாறு, (1) பாவிகள் மீது இயேசு அன்புகூருகிறார் மற்றும் மன்னிக்கிறார் மற்றும் (2) இயேசு பாவத்தைப் பாராட்டிப் பொறுத்துக் கொள்வது இல்லை என்று போதிக்கிறது. உண்மையில் நம்மில் பெரும்பான்மையானவர்கள் இயேசுவின் பண்பைப் பற்றி உண்மையாக உள்ளதாக நம்புகிற விஷயங்களை - எடுத்துக்காட்டாக அவரது அன்பு மற்றும் பரிவிரக்கம் ஆகியவற்றைப் பற்றிய விஷயங்களை - அந்தப் பண்புகளை இயேசு கொண்டிருக்கிறார் என்று சுவிசேஷங்களில் இயேசுவைப் பற்றிய வரலாறுகளில் மறைமுகமாக உணர்த்தப்படுவதாலேயே அறிகிறோம்.

**உதாரணம்: லூக்கா 15ல் மூன்று உவமைகள்**

இன்னொரு உதாரணம் என்ற வகையில், லூக்கா 15ல் உள்ள, காணாமற்போன ஆடு, காணாமற்போன நாணயம் மற்றும் இழந்துபோகப்பட்ட மகன் ஆகிய உவமைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக. இயேசு பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் உணவு அருந்தினார் என்ற விமர்சனத்திற்குப் பதிலுரையாக இந்த உவமைகளை அவர் முன்வைத்தார் (லூக்கா 15:1, 2). பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் எவ்வளவு

அதிகமாக விரும்புகிறார் என்பதையும் அவர்கள் அவ்வாறு செய்யும்போது அவர் எவ்வளவாக மகிழ்வடைகிறார் என்பதையும் இந்த உவமைகளில் காண்பிப்பதன் மூலம், இயேசு தம்மைப் பற்றிய விமர்சனத்திற்குப் பதிலுரை அளித்தார் என்பது தெளிவு. பாவிகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அவர்களுடன் உணவு அருந்துதல் ஆகியவற்றைச் செய்ததில் இயேசு, தேவனுடைய அன்பையும் பாவிகள் மீதான அக்கறையையும் பிரதிபலித்தார் என்ற வகையில் அந்த செயல்களை இயேசு நியாயப்படுத்தினார் என்பதே இந்த உவமைகளின் கருத்தாக உள்ளது. இதற்கு நேரெதிராக, இந்த உவமைகள் (லூக்கா 15ல் வரும் மூத்தமகன் போன்று) இயேசுவின் விமர்சகர்கள் பாவிகளைக் குறித்து தவறான எண்ணப்போக்கைக் கொண்டிருந்தனர் என்பதை இந்த உவமைகள் மறைமுகமாக உணர்த்துகின்றன. *பாவிகள் மீது தேவன் அன்புகூருகிறார்* என்பதை இந்த உவமைகள் மறைமுகமாக உணர்த்துகின்றன!

### உதாரணம்: எபிரெயர் 5:8, 9ல் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல்

எபிரெயர் 5:8, 9ல் மூன்றாவது உதாரணம் ஒன்று அளிக்கப்படுகிறது: ‘‘அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.’’ இவ்வசனப்பகுதி, கிறிஸ்து இரட்சகராக இருக்கிறார் என்று கூறுகிறது மற்றும் இது, அவர் யாரை இரட்சிக்கிறார் என்ற தகவலையும் கூட அளிக்கிறது: அவர் “தமக்குக் கீழ்ப்படிகிற யாவரையும்” இரட்சிக்கிறார். ஆகையால், *கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படுவதற்கு நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்* என்பது இங்கு மறைமுகமான கருத்தாக உள்ளது. சத்தியத்தைப் போதித்தல் என்பது இவ்வசனப் பகுதியின் முதன்மை நோக்கமாக இராதிருக்கையில், இவ்வசனப் பகுதி அதை மறைமுகமாக உணர்த்துகிறது. இந்த சத்தியம் வேதாகமத்தின் வேறு எவ்விடத்திலும் காணப்படும் எந்த உபதேசத்திற்கும் நேரெதிராக இல்லை என்பதால், இரட்சிக்கப்படுவதற்கு கீழ்ப்படிதல் அவசியமானது என்ற உண்மையை வேதாகம ரீதியான உபதேசமாக நாம் ஏற்றுக்கொள்ள முடியும்.

### தொகுப்புரை

விளக்கம் அளிப்பவர், வேதாகமத்தைத் தொடர்ந்து படிக்க வேண்டும், அதில் உள்ள வசனப் பகுதி மறைமுகமாக உணர்த்தும் இறையியல் கருத்துக்களைக் கண்ணோக்கி அவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் மூலமாக அவர் இதைச் செய்ய வேண்டும். வேதாகமப் பாடக்கருத்துகள் பற்றி வேதாகமம் நேரடியான கூற்றுகள் சிலவற்றை ஏற்படுத்துகிறது. இருப்பினும் வேதாகமம் பிரமாணங்கள் மற்றும் முன்மொழிதல் கூற்றுக்களை மாத்திரம் கொண்டிருப்பதில்லை, ஆனால் அது, வரலாறு, தனிநபர் வரலாறு, எடுத்துரைப்பு, பாடல், நிருபங்கள், தீர்க்கதரிசனம், இறைவெளிப்பாட்டு இலக்கியம் மற்றும் ஞான இலக்கியம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. வேதாகமத்தின் இயல்பானது, பல்வேறு வசனப்பகுதிகள் மறைமுகமாக உணர்த்தும் விஷயங்களில் இருந்து நாம், “இங்கு சிறிதும் அங்கு சிறிதுமாக’’ உபதேச சத்தியங்களைக் கற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறது.

வேதவசனங்களின் இறையில் ரீதியான மறைமுகமான உணர்த்துதல்களை

நாடுவதில் அபாயங்களும் உள்ளடங்கி இருக்கின்றன என்பதும் உண்மையே. உண்மையில் வேதவசனத்தில் இராத மறைமுகமான உணர்த்துதல்களை நாம் கண்ணோக்கக்கூடும் என்பது ஒரு அபாயமாக உள்ளது. யோவான் 3:16 மற்றும் பிற வசனப்பகுதிகள், விசுவாசத்தினால் இரட்சிப்பு என்பதைப் போதிப்பதால், நாம் விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட்டுவிடக்கூடும் என்று புதிய ஏற்பாடு மறைமுகமாக உணர்த்துவதாகச் சிலர் நினைக்கின்றனர். இருப்பினும் "விசுவாசம்" பற்றிய வேதவசனங்கள், அப்படிப்பட்ட விஷயத்தை மறைமுகமாக உணர்த்துவதில்லை மற்றும் இரட்சிக்கப்படுவதற்கு நாம் *கீழ்ப்படிய வேண்டும்* என்று வேதாகமம் வேறிடத்தில் போதிக்கிறது.

ஒரு வசனப்பகுதி மறைமுகமாக உணர்த்தும் விஷயங்களைக் காட்டிலும் அதிகமானவற்றை அது மறைமுகமாக உணர்த்துகிறது என்று நாம் நினைக்கலாம் என்பது இன்னொரு அபாயமாக உள்ளது. மேலே பேசப்பட்ட, கலகம் செய்தல் பற்றிய தலைப்புச் செய்தியின் விஷயத்தில், அந்தத் தலைப்புச் செய்தியின் சாட்சியத்தை மாத்திரம் கொண்டிருந்து, புதிய வரிவிதிப்பிற்கு நாட்டில் உள்ள "ஒவ்வொருவரும்" எதிராக இருந்தனர் என்று ஒருவர் முடிவு செய்துவிட இயலாது.

1 கொரிந்தியர் 1:1, 2 பின்வருமாறு கூறுகிறது:

> தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது.

இவ்வசனப்பகுதி, பவுல் ஒரு அப்போஸ்தலனாக இருந்தார் என்று கூறுகிறது, ஆனால் இது வேறு யார் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படலாம் என்பது பற்றி எதுவும் கூறுவதில்லை.

வேதவசனங்களின் முறைமுகமாக உணர்த்துதல்களை நாம் தவறாகப் பயன்படுத்தும் அபாயத்திற்கு எதிராக நம்மை எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்? முதலாவது நாம், சாட்சியத்தின் அடிப்படையிலான முடிவுகளை மாத்திரம் அடைய வேண்டும். இரண்டாவது நாம், ஒரு வேதவசனம் மறைமுகமாக உணர்த்துதல் பற்றிய எந்த முடிவையும், வேதாகமத்தின் வேறொரு இடத்தில் அது போதிக்கும் விஷயத்துடன் ஒப்பிட வேண்டும். அதைச் செய்வதன் மூலமாக நாம், நமது முடிவை உறுதிப்படுத்த முடியும், பின்பு நாம் அவ்வசனப்பகுதியில் நாம் காணுகிற மறைமுக உணர்த்துதலை ஏற்றுக்கொள்ள முடியும்.

## முடிவுரை

இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ள இரு ஆலோசனைகள் ஒன்றுக்கொன்று நேரெதிராக இருப்பதாகக் காணப்படலாம். ஒன்று, "ஒரு வசனப்பகுதியில் அல்லது ஒரு பாடக்கருத்தின் மீது தெளிவான அர்த்தத்தைக் கண்ணோக்குங்கள்" என்று கூறுகிறது; மற்றொன்று, "ஒரு பாடக்கருத்தின் மீது வேதவசனத்தின்

மறைமுகமான இறையியில்ரீதியான குறிப்புகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்று கூறுகிறது. உண்மையில் இவ்விரு கருத்துக்களும் ஒன்றை ஒன்று நிறைவு செய்கின்றன. ஒரு வசனப்பகுதி நேரடியாகக் கூறுவது என்ன என்பதை நாம் கவனித்தல் அவசியமாயிருக்கிறது; பின்பு நாம், அது மறைமுகமாக உணர்த்துவது பற்றிக் கவனிக்க முடியும். இவ்விரு விஷயங்களையும், விடாப்பிடியாக, ஊக்கமாக மற்றும் ஜெபநிறைவுடன் செய்வதன் மூலமாக நாம், தேவனுடைய உதவியுடன், பெரும்பான்மையான பாடக்கருத்துக்கள் மீது வேதாகமம் போதிப்பது என்ன என்பதைப் பற்றி மதிப்புமிக்க முடிவுகளை அடைவோம். இரட்சிக்கப்படுவதற்கு நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்றும் எதைச் செய்ய வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார் என்பதை நாம் நிச்சயமாகவே புரிந்துகொள்வோம்.

---

குறிப்புகள்

[1]முன்மொழிதல் என்பது உண்மையாகவோ அல்லது தவறாகவோ உள்ள மெய் பற்றிய (அல்லது மெய்யென்று தவறாக நிரூபணம் பெற்ற) எளிய கூற்று என்று விளக்கப்படுத்தப்படலாம். [2]விமர்சகர்களின் விவாதம் சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது: முன்மொழிதல்கள் தவறானவைகளாக உள்ளன என்று நிரூபிப்பதற்கு அவர்கள் முன்மொழிதல் ஒன்றை முன்வைக்கின்றனர்: "முன்மொழிதல் வடிவில் சத்தியத்தை உரைத்தல் தவறானதாக உள்ளது" என்பது தன்னிலேயே ஒரு முன்மொழிதலாக உள்ளது. [3]நமது முடிவுகளை நாம் குரலில் வெளிப்படுத்தினாலும் இல்லை என்றாலும், மனிதர்களாகிய நாம், கேள்விப்பட்டு மற்றும் அனுபவித்தல் பற்றி நமது மனங்களில் முன்மொழிதல் போன்ற முடிவுகளை உருவாக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளோம். நாம் வேதாகமத்தை வாசிக்கையில் நமது விருப்ப ஆற்றலுக்கு உட்படாத வகையிலேயே தேவனைப் பற்றிய முன்மொழிதல்களைச் செய்வதால், முன்மொழிதல்களை மேம்படுத்துவதற்காக வேதாகமத்தை நாம் படிக்கக் கூடாது என்று கூறுவது இயல்புக்கு அப்பாற்பட்ட விஷயமாக உள்ளது.